# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I,

**Present : Tmt.P. Subhashini B.A.,B.L.,**

Judicial Magistrate Court No.I,

Tiruchirappalli.

## CC 881/22

Deposition of witness for Prosecution அ.சா.1

Name : கதிர்வேல்

Father Name : மலையாளம்

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age : 37/24

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act of 1969 of the day of 12.08.2024.

1 முதல் 3 எதிரிகள் ஆஜர் . எதிரிகளின் வழக்கறிஞர் ஆஜர் . .

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

நான் தற்போது கரூர் மாவட்டம் நங்காவரத்தில் வசித்து வருகிறேன். நான் பழவியாபாரம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியாது. என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். சுமார் 3 வருடத்திற்கு முன்பாக நான் கடையில் இருந்த போது போலிசார் என்னிடம் வந்து கையொப்பம் கேட்டார்கள். அந்த புகாரில் என்ன எழுதப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியாது. (**அந்த புகார் மனுவில் உள்ள கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). வழக்கு சம்மந்தமாக வேறு எதுவும் தெரியாது. போலிசார் சம்பவம் தொடர்பாக என்னை விசாரணை செய்தார்கள்.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதன் படி பரிசீலனைக்கு பிறகு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

1. கடந்த 20.11.2021 ம் தேதி மதியம் 1.00 மணியளவில் நானும் எனது நண்பர் சதீஸ் என்பவரும் வியாபார விசயமாக சிந்தாமணி பூசாரி தெருவில் உள்ள எங்களது நண்பரை பார்க்க சென்று கொண்டிருந்த போது ஆஜர் எதிரிகள் TN 81 D 1930 Hero Glamour என்ற சிவப்பு கலர் இருசக்கர வாகனத்தில் நின்று கொண்டிருந்தாகவும் கடந்த 1 1/2 வருடங்களாக நான் உங்களிடம் வாங்கும் லாட்டரி சீட்டுகளுக்கு பரிசுகள் ஏதும்

VERDICTUM.IN

விழுவதில்லை என்று கேட்டதாகவும் அதற்கு ஆஜர் முதலாவது எதிரி நான் லாட்டரி சீட்டு வாங்கும் பொள்ளாச்சியை சேர்ந்த நபர் தற்போது போலிஸ் கெடுபிடி அதிகமாக இருப்பதால் லாட்டரி சீட்டுகள் கொஞ்சமாக தான் கொடுப்பதாகவும், உண்மையான லாட்டரி சீட்டுகளை எனக்கு தெரிந்த முக்கியமான நபர்களுக்கும் மட்டும் விற்பனை செய்வதாகவும் அதேபோல் என்னிடம் லாட்டரி சீட்டுகள் வாங்கி விற்கும் ஆஜர் 2 மற்றும் ஆஜர் 3 எதிரிகளிடம் விற்க சொன்னேன் என்றும், அதில் வரும் பணம் எங்களது செலவுக்கு போதாததால் நாங்கள் மூவரும் அதிக லாபம் கருதி உன்னை போல் எங்களிடம் லாட்டரி சீட்டுகள் வாங்கும் மற்ற சில வாடிக்கையாளர்களுக்கு போலியான லாட்டரி எண்களை வெள்ளை பேப்பரில் பிரிண்ட் செய்து அதை ஏமாற்றி விற்று சம்பாதித்து வருகிறோம் என்று போலிசார் விசாரணையில் சொன்னேன் என்றால் சரியல்ல.

2. மேலும் போலிசார் விசாரணையில் ஆஜர் எதிரிகளிடம் ஏன் என்னை இப்படி ஏமாற்றுகிறீர்கள் என்று கேட்டதற்கு அதற்கு அவர்கள் நாங்கள் அப்படி தான் செய்வோம் உன்னால் முடிந்ததை பார்த்து கொள் என்று சொல்லி இருசக்கர வாகனத்தில் சென்று விட்டதாகவும் இது சம்மந்தமாக கோட்டை காவல் நிலையத்தில் எதிரிகளுக்கு எதிராக புகார் கொடுத்ததாகவும் போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக வழக்கு சம்பவம் எதுவும் தெரியாது என்று உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

குறுக்கு விசாரணை இல்லை.

Taken down by me/before me in open court,
interpreted/Read over to the witness and admitted
by the deponent to be correct.

***Sd/ P. Subhashini B.A.,B.L.,***
Judicial Magistrate No.I,
Tiruchirappalli

WEB COPY